## அரூபம்

வார்த்தைகளின் ஹார்மோனியப் பெட்டியின்
ஸ்வரக் கட்டைகளிளிருந்து எழுந்து
காற்றில் மிதந்து துயரமாய்ப் புரள்கிறது
எனது அரூபம்.
ரயில்வே பிளாட்பாரத்தில்
யாருடைய கூந்தலிலிருந்தோ நழுவி விழுந்து
பலரது காலடிகள் மிதித்துச் சிதையும்
அநாதையான ஒரு ஒற்றை சிவப்பு ரோஜாவைப் போல்
அது மிரள்கிறது.
பசித்த வீடற்ற தெருவோர மனிதன்
என் மேசையில் எனக்காக பரிமாறப்பட்ட உணவை
என் எதிரில் வந்தமர்ந்து எடுத்துச் சாப்பிடுவதுபோல்
என் தூரிகைத் தீண்டலில் எனக்கென்று நான் உருவாக்கிய
ஓவியத்தைக் கைப்பற்றி
அரூப அர்த்தங்களை விளைவித்து அறுவடை செய்கிறது.
அகராதிகள் புரட்டி தேர்ந்தெடுத்து
பாயும் என் குருதி நதியில் தோய்த்தெடுத்து
என் மூச்சுக்காற்றை ஊதிச் செய்த என் பிரதியில்
கண்ணுக்குப் புலப்படாத தன் வார்த்தைகளை இட்டு நிரப்பி
அர்த்தஜாடையை மாற்றுகிறது.
புயற்காற்றில் சிறகுகள் இழந்த பட்டாம்பூச்சியைப் போல்
வீழ்ந்து கிடக்கிறேன் பூச்செடியின் காலடியில்.
பார்வையிழந்த என் நண்பனிடம்
ஊமையர் பாஷையில் உரையாடித் தோற்கிறேன்.
அரூபச் செடியில் பூத்த
ஒரு சின்னஞ்சிறு மலரோடு காத்திருக்கிறேன்

எனது அன்பை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக.

--- 1 , செப்டம்பர் 2020

